1982 மார்ச் 1]

லமைச்சரவர்கள், மத்திய அரசு கொடுக்காவிட்டால் நாமே செய்யலாம் என்று சொல்லி இப்பொழுது ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். நிச்சயமாக மாநில அரசு இந்தத் திட்டத்தை எடுத்துச் செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10—10]

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே பல முறை மத்திய அரசை நம் மாநில அரசு வற்புறுத்தி இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். இன்றைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் முயற்சி எடுத்து இந்தத் திட்டத்தை நாமே எடுத்து நடத்தவிருப்பதாகச் சொல்லி இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்காக எவ்வளவு கோடி ரூபாய் செலவாகும் என்று ஆய்விலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வு முடிந்து எப்போது வேலை துவங்கப்படும் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக தெற்கு பக்கிங்காம் கால்வாயை 31 மைல் நீட்டிப்பதற்கு 190 இலட்சம் செலவிலும் வடக்கு பக்கிங்காம் கால்வாயை—இரண்டாம் திட்டமாக—35 மைல் நீட்டிப்பதற்கு 210 இலட்ச ரூபாயும்— ஆக மொத்தம் 4 கோடி ரூபாயை செலவு செய்ய தயார் செய்து அனுப்பினோம். அதற்கு நமது முதலமைச்சருக்குப் பதில் தரும்போது சில நிதிப் பற்றாக்குறையின் காரணமாக கைவிட்டுவிட்டார்கள். அதற்குப் பிறகு இப்போது மாநில அரசே அதைச் செய்யலாம் செயல்படுத்த வேண்டும் என்று தலைமைப் பொறியாளரைக் கலந்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். மாநில அரசு நிச்சயமாக இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளும்.

உதமகண்டலத்திலுள்ள போட்டோ பிலிம் நிறுவனம் மூலம் வண்ணப்பிலிம் உற்பத்தி செய்யும் திட்டம்.

*வினா எண். 297—**திரு. கு. ரமணி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) உதகமண்டலத்தில் உள்ள போட்டோ பிலிம் கம்பெனியில் வண்ணப்பிலிம் உற்பத்தி செய்கிற விரிவாக்கத் திட்டம் மத்திய அரசால் அனுமதி தரப்பட்டுள்ளதா ?

(ஆ) இது குறித்து மாநில அரசு என்ன் நடவடிக்கைகளை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, (அ) இந்துஸ்தான் போடடோ பிலிம்ஸ் நிறுவனத்தின் வண்ண

பிலிம் உற்பத்தி செய்கிற தொழிற்சாலை சுமார் 100 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கத் திட்டம் பற்றிய செயற் குறிப்பு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மேற்படி விரிவாக்கத்தை உதகமண்டலத்திலேயே மேற்கொள்ள நிறுவனத்திற்கு அனுமதியளிக்கும்படி மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கூட, இது குறித்து மத்திய தொழில் அமைச் சருக்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த வண்ண பிலிம் உற்பத்தி செய்யும்படியான விரிவாக்கத் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவதற்கு சில பல வருடங்களாக இந்த ஆலோசனை நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு திட்டத்தைத் தயாரித்து அமலாக்க வேண்டும் என்பது தொழில் நுணுக்கத் துறையில் சாத்தியப்படாத கஷ்டமான காரியம் அல்ல. அப்படி இருந்தும் இவ்வளவு நீண்டுகொண்டு போவதற்கு காரணம் என்ன ? இந்தத் திட்டத்தைத் தமிழ்நாட்டுக்குத் தராமல் வேறு பக்கத்தில் கொண்டு போவதற்கு சில ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்ற செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன இது பற்றி அரசுக்கு ஏதாவது தெரியுமா ? அதைத் தடுப்பதற்கு அரசு ஆலோசனை செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து மத்தியத் தொழில் அமைச்சர்ரிடத்திலே இருந்து இறுதியாக வந்திருக்கின்ற கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி வேறு நாடுகளோடு, வேறு நிறுவனங்களோடு, டெக்னிக்கல் கொலாபரேஷன் இருப்பதாகவும், அது இறுதியாக்கப்படுவதற்கு எந்த இடத்தில் நிறுவ வேண்டும் என்றும் ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். அப்படி ஆலோசித்து கொடுக்கிறபோது தமிழ்நாட்டுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்று பதில் கடிதத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே நாம் சந்தேகப்படாமல் ஏற்கெனவே ஊட்டியிலே இருக்கும் அந்த நிறுவனத்தை விரிவாக்கம் செய்து, உதகையிலேயே தமிழ்நாட்டிலேயே வரும் என்று மனப்பூர்வமாக நம்புவோம். தொடர்ந்து வலியுறுத்துவோம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே இந்த ஒரே ஒரு நிறுவனம்தான் இப்படிப்பட்ட பிலிம் உற்பத்தி கம்பெனியாகும். வேறு எதுவும் இந்த நாட்டிலே கிடையாது. இது தமிழ்நாட்டிலேயே மிக முக்கியமான, அதிகப்படியான வண்ணப்படங்கள் உற்பத்தி செய்யக்கூடிய நிறுவனம். தமிழ்நாடு சினிமாத்துறை மிகவும் முன்னேறியுள்ள பிரதேசம். இது கம்பெனி என்று இருந்தாலும் இது ஒரு கார்ப்பரேஷன்தான். இதிலே தமிழ்நாடு அரசும் பங்கு சேர்ந்து நமக்கு ஓரளவு இந்த

1982 மார்ச் 1]

வண்ணப் படங்களும் அதே மாதிரி எக்ஸ்ரே பிலிம்களும் கிடைக்க வேண்டும். இதிலே ஒரு கூட்டாளியாகச் சேர்ந்து கொள்ள அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ' எக்ஸ்-ரே ' பிலிம் போன்ற பிலிம் சுருள்கள் இப்போதே தயாரிக்கப்படுகின்றன. தமிழ் நாட்டிலே மட்டுமல்ல. பம்பாய் போன்ற எல்லா மாநிலங்களிலும் கலர் பிலிம்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. ஆகவே, அந்தக் கலர் பிலிம் தயாரிக்கும் தொழிற்சாலையை இங்கே ஆரம்பிக்க வேண்டும் என்பது மிகவும் அவசியம் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். எனவே தொடர்ந்து நாம் அதை வலியுறுத்தி வருகிறோம். அது மட்டுமல்ல. அது ரூ. 100 கோடி மதிப்புள்ள ஒரு ப்ராஜக்ட். அதை உதகமண்டலத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு மத்திய அமைச்சர்களிடத்தில் டெல்லி செல்கின்ற நேரத்தில் நேரில் பலமுறை தெரிவித்து இருக்கிறேன், கடிதம் மூலமும் எழுதியிருக்கிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் நேரில் பலமுறை அதை வலியுறுத்தி இருக்கிறார்கள். கடிதமும் எழுதி இருக்கிறார்கள். அதற்குத் தமிழ் நாடு அரசின் சார்பில் முதலீடு போடுவது பற்றி தற்போது எந்த விதமான செயற் குறிப்பும் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. கல்லன் : தலைவர் அவர்களே, அண்டை மாநிலமான கருநாடகா, ஜம்மு-காஷ்மீர் மற்றும் சிம்லா போன்ற இடங்களில் இந்தத் தொழிற்சாலையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அதைத் தடுக்க அரசு நடவடிக்கை, எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். எனவே, அவர் தன்னுடைய கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்தில் இதைப் பற்றிப் பேசி, அவர்கள் நாடாளுமன்றத்தில் இந்தக் கூட்டத் தொடரிலேயே இதைப் பற்றி வலியுறுத்திப் பேசி, தமிழக அரசு வலியுறுத்திக்கொண்டு இருக்கின்ற இந்தத் திட்டத்திற்கு வலிவூட்டுமாறு செய்யவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்தத் திட்டம் நெடுங்காலமாக பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, இந்தத் திட்டம் அங்கே செயலுக்கு வராமல் போய்விடுமோ என்கிற அச்சம், ஒரு ஆபத்து மக்கள் மத்தியில் இருக்கிறது. மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு கல்லன் அவர்கள் சுட்டிக் காட்டியதுபோன்ற பிரச்னைகளும் இருக்கின்றன. ஆகவே, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தர மைய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

[1982 மார்ச் 1

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்சனவே சொன்னதைப்போல இல்லை என்கிற பதில் இதுவரைக்கும் நமக்குத் தரப்படவில்லை. நாம் அதை வலியுறுத்திக்கொண்டு வருகிறோம் தொடர்ந்து வலியுறுத்துவோம். வராமல் போய்விடுமோ என்கிற சந்தேகம் வரத் தேவையில்லை இங்கே தொடங்கவேண்டும் என்பதை நாம் தொடர்ந்து வலியுருத்தி வருகிறோம். இங்குதான் தொடங்கப் படும் என்று நம்புவோம்.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தில் மத்திய அரசு பல்வேறு தொழிற்சாலைகளைத் துவங்கியிருக்கிறது. குறிப்பாக, நெய்வேலி, இந்த போட்டோ தொழிற்சாலை போன்றவையாகும். இதிலே எல்லாம் மாநில அரசு சமபங்கு மூலதனம் போட்டு, அதிலே உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களின் வினியோகம் போன்றவற்றிலும் ஆலோசனை அளிக்கும் வகையில் உரிமைகள் வழங்க வேண்டும் என்று தமிழக அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளை ஆரம்பிக்கின்ற நேரத்தில் மைய அரசு அதனுடைய நிதி ஆதாரங்களின் அடிப்படையில் செய்கிறது. அப்படிச் செய்கிற நேரத்தில் அவர்கள் ஏறத்தாழ 200 கோடி, 300 கோடி 500 கோடி, என்று மூலதனம் போட்டு ஆரம்பிக்கிறார்கள். அதிலே பாதி மாநில அரசு ஏற்றுக்கொள்வது என்பது மாநில அரசின் நிதி ஆதாரங்களுக்கு இயலாத ஒன்றாகும். ஆகவேதான் மாநில அரசைப் பொறுத்தவரையில், எந்த மாநிலத்திலும் இந்தத் திட்டம் வற்புறுத்தப்படவில்லை. அதற்குப் பதிலாக மத்திய அரசு திட்டங்கள் அமைக்கின்ற நேரத்தில் அதை ஒவ்வொரு மாநிலமும் தன்னுடைய மாநிலத்தில் அமைக்கவேண்டும் என்று வற்புறுத்துகின்றன. நாமும் அந்த வகையில் வலியுறுத்தி வருகிறோம். அப்படி செய்து வருவதன் மூலம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சியும் அதிகமாக்க முடியும்.

ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் ஆஸ்பெஸ்டாஸ் ஓடு உற்பத்தி செய்யும் திட்டம்.

* வினா எண் 298—**திரு. வி. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ஆலங்குளத்திலுள்ள சிமெண்ட் ஆலையில் புதியதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் ஆஸ்பெஸ்டாஸ் ஆலை எப்பொழுது ஆரம்பமாகும்?

(ஆ) அத்தொழிற்சாலையின் மதிப்பீடு எவ்வளவு?

(இ) தொழிற்சாலையை கட்ட நிலம் கொடுத்தவர்களில் எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது?

(ஈ) மொத்தம் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?